## கோரிக்கை எண். 4

# தமிழ்நாடு பொது விற்பனை வரிகள், ஏனைய வரிகள், தீர்வைகள் நிருவாகம்

### 1. *முன்னுரை:*

*வணிகவரித் துறை, மிக அதிக அளவு வருவாய் ஈட்டித்தரும் மாநில அரசுத் துறையாகும். வணிகவரி ஆணையர் வணிகவரித் துறையின் தலைவராவார். அவருக்கு உதவியாக தலைமை அலுவலகத்தில் வணிகவரி இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள் மற்றும் உதவி ஆணையர்கள் உள்ளனர். களப்பணிகளில், இவருக்கு உதவ துணை ஆணையர்கள் (ஆட்சிப்பகுதி), இணை மற்றும் துணை ஆணையர்கள் (செயலாக்கம்) உள்ளனர். வணிகவரித் துறை பின்வரும் வரி விதிப்புச் சட்டங்களை நிருவகித்து வருகிறது:*

*(1) தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டம்.*

*(2) தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச்சட்டம்.*

*(3) தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு விற்பனை வரிச்(மேல்வரி) சட்டம்.*

*(4) 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச்சட்டம்.*

*(5) தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச்சட்டம்.*

*(6) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதிச்சட்டம்.*

*(7) தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச்சட்டம்.*

*(8) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள் மற்றும் தங்கும் விடுதிகளில் ஆடம்பர வசதிகள் மீதான வரிச்சட்டம்.*

109/125-

(9) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச்சட்டம்.

(10) தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு உள்ளாட்சிப்பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவின் மீதான வரிச்சட்டம்.

மாநில அரசுக்கு கிடைக்கின்ற வருவாயில் பெரும்பகுதி, அதாவது மொத்த வருவாயில் சுமார் 70 சதவீதம், வணிகவரிகள் வாயிலாகக் கிடைக்கிறது. 1993-94 ஆம் ஆண்டில் ரூபாய் 3399.29 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. 1992-93 ஆம் ஆண்டில் ரூ. 3,016.89 கோடி ரூபாயும், 1991-92 ஆம் ஆண்டில் 2,575.70 கோடி ரூபாயும் வசூலிக்கப்பட்டுள்ளது.

## 2. வணிக வரித்துறையின் வருவாயும், செலவும் வருமாறு:

| ஆண்டு (1) | வருவாய் (2) | செலவு (3) |
|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | |
| 1989-90 | 17,59.02 | 23.28 |
| 1990-91 | 21,67.16 | 28.30 |
| 1991-92 | 25,75.70 | 31.86 |
| 1992-93 | 30,16.89 | 35.75 |
| 1993-94 | 33,99.29 | 31.95 (31.1.94 வரை) |

## 3. வணிக வரித்துறை நான்கு பிரிவுகளாகச் செயல்படுகிறது.

அவையாவன:
(i) வரி மதிப்பீட்டுப் பிரிவு.
(ii) மேல் முறையீட்டுப் பிரிவு.
(iii) செயலாக்கப் பிரிவு.
(iv) தணிக்கைப் பிரிவு.

### (i) வரி மதிப்பீட்டுப் பிரிவு:

இம்மாநிலத்தில் தற்போது 314 வரி விதிப்பு வட்டங்கள் உள்ளன. இவற்றுள் 92 வட்டங்கள் துணை வணிகவரி அலுவலர்கள் தலைமையிலும், 216 வட்டங்கள் வணிகவரி அலுவலர்கள் தலைமையிலும் மற்றும் 6 வட்டங்கள் வணிகவரி உதவி ஆணையர்கள் தலைமையிலும் இயங்குகின்றன. 1993-94 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் கோட்டத்தில் ஆவாரம்பாளையம் மற்றும் சேலம் கோட்டத்தில் அரிசிப்பாளையம் ஆகிய இரண்டு புதிய வரி விதிப்பு வட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.



தற்போது இம்மாநிலத்தில் 39 வணிகவரி மாவட்டங்கள் உள்ளன. அதிகரித்துள்ள வேலைப் பளுவைச் சமாளிக்க 1993-94 ஆம் ஆண்டில் சென்னையில் புதிய வணிகவரி சரகம், அதாவது 11-வது சரகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வணிகவரித் துறை நிர்வாகத்திற்காக இம்மாநிலத்தை 9 கோட்டங்களாக பிரித்து ஒவ்வொரு கோட்டமும் ஒரு துணை ஆணையரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது.

1994-95 ஆம் ஆண்டில் பின்வரும் கருத்துருக்கள் அரசின் ஆய்வில் உள்ளன.

(அ) வரி விதிப்பு வட்டங்களை பிரித்து கூடுதலாக இரு வரிவிதிப்பு வட்டங்கள் ஏற்படுத்துதல்.

(ஆ) இரண்டு வரிவிதிப்பு வட்டங்களில் தற்போதுள்ள பதவிகளின் நிலையை உயர்த்திச்செம்மைப்படுத்துதல்.

(இ) தணிக்கைக் குழுக்களுக்கு இளநிலை உதவியாளர் – தட்டச்சர் பதவி வழங்குதல்.

(ஈ) வரி வசூல் பிரிவைச் செம்மைப்படுத்துதல்.

### (ii) மேல் முறையீட்டுப் பிரிவு:

மேல் முறையீட்டுப் பிரிவைப் பொருத்தவரையில், விற்பனை வரி மேல் முறையீட்டு நடுவர் மன்றத் தலைவரின் ஒட்டு மொத்த கணகாணிப்பின் கீழ் 20 மேல் முறையீட்டு உதவி ஆணையர்கள் பணியாற்றி வருகிறார்கள். மேல் முறையீட்டு நடுவர் மன்றத் தலைவர் பணி முன்னேற்றத்தை ஆய்வு செய்கிறார். நிர்வாகக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் மேல்முறையீடுகளை தீர்வு செய்வது தொடர்பான பணி முன்னேற்றம் குறித்து அரசும் ஆய்வு செய்து வருகிறது. தற்போதைய அமைப்பில் மேல் முறையீட்டுப் பிரிவு வணிக வரித்துறையின் கண்காணிப்பிற்கு அப்பாற்பட்டுள்ளது. இதே நிலையை மேல் முறையீட்டு துணை ஆணையருக்கும் பொருந்துமாறு ஆணையிடலாம் எனக் கருதப்பட்டது. அதனடிப்படையில் இரண்டு மேல் முறையீட்டு துணை ஆணையர்கள் பதவியினை ஏற்படுத்தியுள்ளது. இவர்கள் சென்னை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள மத்திய வரி விதிப்பு வட்ட உதவி ஆணையர்களால் பார்க்கப்படும் வரி விதிப்பு ஆணைகளின் மீதான முறையீடுகளை விசாரித்து முடிவு செய்வார்கள்.

### தமிழ்நாடு வரி விதிப்பு சிறப்பு நடுவர் மன்றம் அமைத்தல்:

தற்போது பல்வேறு வரி விதிப்புச் சட்டங்களின் கீழ் விதிக்கப்பட்ட பலகோடி ரூபாய் வரி சம்பந்தப்பட்ட வழக்குகள் தீர்ப்பு வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளன. இவ்வழக்குகளை விரைவாக தீர்வு செய்து அதன் மூலம் அரசுக்கு சேர வேண்டிய பெருமளவிலான வரி பாக்கி தொகையை

வசூலிக்கும் பொருட்டு "வரிவிதிப்பு சிறப்பு நடுவர் மன்றம்" ஒன்று ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. "தமிழ்நாடு 1992 ஆம் ஆண்டு வரிவிதிப்பு சிறப்பு நடுவர் மன்றச் சட்டம்" என்ற சட்டத்தை அரசு இதற்காக இயற்றியுள்ளது. இதுவரையில் உயர்நீதிமன்றம் விசாரித்து வந்த வழக்குகளை இனிமேல் இந்த சிறப்பு நடுவர் மன்றம் விசாரிக்கும். தொடக்கத்தில் தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டம், தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச்சட்டம், தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரி) சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் வரும் வணிகவரி வழக்குகளை மட்டும் இந்த சிறப்பு நடுவர் மன்றம் விசாரிக்கும்.

"தமிழ்நாடு வரி விதிப்பு சிறப்பு நடுவர் மன்றம் (நடைமுறை), விதிகள்" மற்றும் "தமிழ்நாடு வரிவிதிப்பு சிறப்பு நடுவர் மன்றம் (தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர் ஆகியோரின் ஊதியம், படிகள் மற்றும் பணி நிபந்தனைகள்) விதிகள்" ஆகியவை இயற்றப்பட்டுள்ளன.

### (iii) செயலாக்கப்பிரிவு:

இந்த மாநிலத்தில் நான்கு செயலாக்கக் கோட்டங்கள் உள்ளன. சென்னையிலுள்ள செயலாக்கக் கோட்டம் வணிக வரிகள் இணை ஆணையர் தலைமையின் கீழ்செயல்பட்டு வருகின்றது. மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள செயலாக்கக் கோட்டங்கள் துணை ஆணையர்கள் தலைமையில் செயல்பட்டு வருகின்றன. சோதனைச் சாவடிகளும் இணை/துணை ஆணையாளர்கள் (செயலாக்கம்) கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. தமிழ்நாட்டில் தற்போது 57 வணிகவரிச் சோதனைச் சாவடிகள் இயங்கி வருகின்றன. அவற்றுள் 31 மாநில எல்லையோரச் சோதனைச் சாவடிகளாகும். 1993–94 ஆம் ஆண்டில் கணியூர் (கருமத்தப்பட்டி வெளி வழி) மற்றும் பள்ளிப்பாளையம் ஆகிய இரண்டு சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிலிருந்து பாண்டிச்சேரி மற்றும் காரைக்காலுக்கும், மேலும் அந்த மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டிற்கும் எடுத்துச் செல்லப்படும் பொருள்களை தணிக்கை செய்வதற்காக பாண்டிச்சேரியைச் சுற்றி 8 சோதனைச் சாவடிகளும், மற்றும் காரைக்காலைச் சுற்றி 3 சோதனைச் சாவடிகளும் அமைத்திட அரசு சமீபத்தில் உத்தரவிட்டுள்ளது.

மொத்தமுள்ள 57 சோதனைச் சாவடிகளில், 22 பெரிய சோதனைச் சாவடிகள் ஆகும். அவற்றுள் பூவிருந்தவல்லி, ஓசூர், கந்தேகவுண்டன் சாவடி, இராணிப்பேட்டை, இரும்பூலியூர், புழல் ஆகிய இடங்களிலுள்ள ஆறு சோதனைச் சாவடிகளும் இருவழிச் சோதனைச் சாவடிகளாகும். சோதனைச் சாவடிகளில், போக்குவரத்து நெருக்கடியைத் தவிர்த்து வாகனங்களை விரைவாகத் தணிக்கை செய்ய வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, ஒரு நாளைக்கு 1,000 வண்டிகளுக்கு மேல் கடந்து



செல்லும் சோதனைச் சாவடிகளில் படிப்படியாக இருவழிச் சோதனைச் சாவடிகள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கணியூர் (கருமத்தப்பட்டி) சோதனைச்சாவடி வழியாகச் செல்லும் வண்டிகள் 1,200-க்கும் மிகைப்படுவதால் கணியூர் வெளி வழி சோதனைச் சாவடி தேவையான பணியாளர்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.

சோதனைச் சாவடிகள் வழியாகச் செல்லாத வாகனங்களை இடைமறித்து சோதனை செய்ய சுழற் படைகள் உள்ளன. 1993-94 ஆம் ஆண்டில் திருவள்ளூர், பூவிருந்தவல்லி, செங்கல்பட்டு ஆகிய இடங்களைத் தலைமையகமாகக் கொண்ட கூடுதல் சுழற் படைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் காரைக்குடி மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் உள்ள சுழற் படைகள் செம்மைப்படுத்தப்பட்டுள்ளன. சுழற்படையின் பணியை மேம்படுத்த சென்னையில் உள்ள 3 பெரிய சோதனைச் சாவடிகளையும், 1 சிறிய சோதனைச் சாவடியையும் 4 உயர் அலுவலர் சீருந்துகளையும், 7 சுழற்படை ஊர்திகளையும் கிரீம்ஸ் சாலையில் உள்ள மைய அலகுடன் இணைத்து கம்பியில்லாத் தொடர்பு வசதி அளிக்கப்பட்டுள்ளது.

### (iv) தணிக்கைப் பிரிவு:

துறைத் தணிக்கைப் பிரிவு, வரிவிதிப்பு மற்றும் வரி வசூல் ஆகியவற்றில் காணப்படும் குறைகளைக் கண்டுபிடிக்கிறது. இதன் மூலம் மாநிலக் கணக்காய்வுத் தலைவரின் தணிக்கைக்கு முன்னதாகவே அவற்றைச் சரிப்படுத்த முடிகிறது. தற்போது 41 துறைத் தணிக்கைக் குழுக்கள் உள்ளன. இவை, சம்பந்தப்பட்ட துணை ஆணையர்கள் வகுக்கும் செயல் திட்டங்களின் அடிப்படையில் செயல்படுகின்றன. துறைத் தலைமை அலுவலகத்தில், மாநில கணக்காய்வுத் தலைவரின் தணிக்கை அறிக்கை மற்றும் அவற்றின் மீதான குறைகளையும் பணி ஆகியவை வணிக வரி ஆணையரின் கீழ் ஒரு இணை ஆணையரைக்கொண்ட தணிக்குழுவினால் கவனிக்கப்படுகின்றன. ஒவ்வொரு காலாண்டிலும் அதற்கு முந்தைய காலாண்டில் செய்யப்பட்ட வரி விதிப்பு மற்றும் வசூல் பணிகள் துறைத் தணிக்கைக் குழுவால் தணிக்கைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. துறைத் தணிக்கைக் குழுவின் அறிக்கை மீதான குறை நிவர்த்தி நடவடிக்கையை குறைகள் முற்றிலுமாக நிவர்த்தி செய்யப்படும் வரையில் மாவட்ட உதவி ஆணையர்களால் கண்காணிக்கப்படுகின்றன. மாநிலக் கணக்காய்வுத் தலைவரால் எழுப்பப்படும் முக்கிய தணிக்கைப் பத்திகள் மற்றும் துறைத் தணிக்கைக் குழுவின் முக்கிய தணிக்கைக் குறிப்புகள் ஆகியவை வணிக வரி ஆணையர் அலுவலகத்தில் உள்ள தணிக்கைப் பிரிவால் கண்காணிக்கப்படுகின்றன. துறைத் தணிக்கைப் பிரிவின் செயல்பாட்டினை மேம்படுத்த அவர்களின் பணி தகுந்த கால இடைவெளியில் ஆய்வு செய்யப்படுகிறது. மேலும் நீதி மன்றங்களின் சமீபகால தீர்ப்புகள், அவை குறித்த விளக்கங்கள் ஆகியவை சுற்றறிக்கைகளாகவும்,

செய்தித்தொகுப்புகளாகவும் வெளியிடப்பட்டு, வணிக வரி ஆணையர் அலுவலகத்திலிருந்து அவர்களுக்கு அனுப்பப்படுகின்றன.

## 4. கட்டிடங்கள் - வணிகவரி அலுவலகங்களுக்கு அரசுக் கட்டிடங்கள் கட்டுதல்:

வணிகவரித்துறை அலுவலகங்கள் அனைத்தும் அரசுக் கட்டிடத்தில் இயங்கவேண்டும் என்பதே அரசின் கொள்கையாகும். தற்போது அனைத்து துணை ஆணையர் அலுவலகங்களும் அரசின் சொந்தக் கட்டிடங்களில் இயங்குகின்றன. இது போன்றே 4 உதவி ஆணையர் அலுவலகங்கள் தவிர ஏனைய உதவி ஆணையர்களின் அலுவலகங்கள் அரசு கட்டிடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. 11 மேல்முறையீட்டு உதவி ஆணையர் அலுவலகங்கள் அரசுக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. எஞ்சிய 6 மேல் முறையீட்டு உதவி ஆணையர் அலுவலகங்கள் சென்னையில் தனியார் கட்டிடங்களில் இயங்கிவருகின்றன. மற்ற 345 அலுவலகங்களில் 114 அரசு கட்டிடங்களிலும், 231 தனியார் கட்டிடங்களிலும் இயங்கிவருகின்றன. இந்த அலுவலகங்களுக்கு தேவையான நிலத்தைக் கையகப்படுத்தி படிப்படியாக அரசு கட்டிடங்கள் கட்டப்படும்.

57-ல் சோதனைச் சாவடிகளில் 15 சோதனைச் சாவடிகள் நிரந்தரமாக அரசுக் கட்டிடங்களிலும் மற்ற சோதனைச் சாவடிகள் தனியார் கட்டிடங்களில் அல்லது புறம்போக்கு நிலத்தில் அமைக்கப்பட்ட கீற்றுக் கொட்டகையிலும் செயல்பட்டு வருகின்றன.

வாணியம்பாடியிலும், ஆரணியிலும் உள்ள வணிகவரி அலுவலகங்களுக்கு தலா ரூ. 10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டிடங்கள் கட்டவும், பன்னாரியில் உள்ள சோதனைச் சாவடிக்கு ரூ. 3.70 இலட்சம் மதிப்பீட்டில் நிரந்தரக் கட்டிடம் கட்டவும் 1993-ல் அனுமதி அளிக்கப்பட்டது. அக்கட்டிடங்கள் கட்டும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

## 5. வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம்:

வணிகவரித்துறை அலுவலர்களில் நிர்வாகத் திறமையை மேம்படுத்தி அவர்களின் செயல்திறனை உயர்த்துவதற்காக, வணிகவரிப்பணியாளர் பயிற்சி நிலையம் நிறுவப்பட்டது. 1982 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இப்பயிற்சி நிலையத்தில் வணிக வரித்துறை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையத்திற்கு வணிகவரித் துணை ஆணையர் ஒருவர் தலைவராகவுள்ளார். இவருக்கு வணிக வரி உதவி ஆணையர் இருவரும், வணிகவரி அலுவலர் ஒருவரும் உதவி புரிகின்றனர். இப்பயிற்சி நிலையம், உதவி வணிகவரி அலுவலர், துணை வணிக வரி அலுவலர், வணிகவரி அலுவலர் ஆகியோருக்கு "நினைவுகூர் பயிற்சி" வகுப்புகளை நடத்துகிறது.



இந்நிலையம் வணிகவரித்துறையின் நிர்வாகம் சம்பந்தமான குறிப்பிட்ட தலைப்புகள் குறித்து துறைகளிலுள்ள வல்லுநர்கள் வாயிலாக சிறப்பு விரிவுரைகளுக்கும் ஏற்பாடு செய்கிறது. 1993-94 ஆம் ஆண்டில் 48 வணிக வரி அலுவலர்களும் 54 துணை வணிகவரி அலுவலர்களும், 124 உதவி வணிகவரி அலுவலர்களும் பயிற்சி பெற்றுள்ளார்கள்.

கணிப்பொறி மயமாக்குவதற்காக, பயனுள்ள தகவல் விவரங்களைச் சரியான படிவத்தில் அலுவலர்கள் அனுப்புகின்றனரா என்பதை உறுதி செய்ய அவர்களுக்கு கணிப்பொறி பற்றிய தெளிவும், அனுபவமும் தேவை. எனவே உதவி ஆணையர் பதவியிலும் அதற்குக் கீழ் பதவியிலும் உள்ள அலுவலர்களுக்கு சென்ற ஆண்டு முதல் கணிப்பொறி அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதுவரை 60 உதவி ஆணையர்களுக்கும், 185 வணிகவரி அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## 6. கணிப்பொறி மையம்:

வணிகவரித் துறையின் கொள்கைகளைத் திறம்பட வடிவமைக்கவும், நிர்வாகத் திறமையை மேம்படுத்தவும் தேவையான விவரங்களைச் சேகரித்து, தொகுத்து, முறைப்படுத்தி, தகவல்கள் பெற்றுக்கொள்ள கணிப்பொறி மையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு செயல்படுத்தப்பட்ட கணிப்பொறி மயமாக்கும் திட்டங்கள் நடப்பு ஆண்டிலும் தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. 1993-94-ல் கணிப்பொறியைப் பயன்படுத்தி பின்வரும் தகவல்கள் எடுக்கப்பட்டுள்ளன:-

(1) மாநிலத்தில் பதிவு செய்துள்ள வணிகர்களின் இப்போதைய நிலவரப்படியான விவரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

(2) சரக்கு வாரியான விற்பனைத்தொகை மற்றும் செலுத்தப்படும் வரி ஆகிய தகவல்கள் பெற மாதாந்திர நமூனாக்களிலிருந்து விவரங்கள் சேகரிக்கப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளன.

(3) தெரிந்தெடுக்கப்பட்ட சரக்குகள் பற்றி தகவல்கள் பெற சோதனைச் சாவடியிலிருந்து கிடைக்கும் விவரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

(4) மாநில அளவிலும், ஒவ்வொரு வணிகவரிக்கோட்ட அளவிலும் தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் கீழ் மிக அதிகமாக வரி செலுத்தும் முதல் 100 வணிகர்கள் பற்றிய விவரங்கள், செலுத்தும் வரியினடிப்படையில் இறங்கு வரிசையில் தொகுக்கப்பட்டுள்ளன.

(5) 1991-92 ஆம் ஆண்டில் மாநிலத்தில் உள்ள திரையரங்குகள் செலுத்திய கேளிக்கை வரி பற்றிய விவரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

உயர்மட்ட விற்பனை வரிச் சீராய்வுக் குழு தனது அறிக்கையில் அதிவேகமாக வளர்ந்துவரும் வியாபாரத்துறைக்கு ஈடுகொடுக்கவும், பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தி வரி ஏய்ப்பு செய்வோரை உறுதியுடன் சமாளிக்கவும், காலதாமதம் செய்யாமல் வணிகவரிகள் பற்றிய தகவல்கள் சேகரிக்கும் முறையை கணிப்பொறி மயமாக்குதல் மூலம் செய்ய வேண்டும் என்று பரிந்துரை செய்திருந்தது. அதனடிப்படையில் தற்போதுள்ள கணிப்பொறி மையத்தின் அமைப்பை மேம்படுத்துவதற்காக 8-6-1993 நாளிட்ட வணிகவரிகள் மற்றும் அறநிலையத்துறையின் அரசாணை (நிலை) எண் 175-ல் ரூபாய் 35 இலட்சங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய உயர்மட்ட விற்பனை வரி சீராய்வுக் குழு வணிகவரித்துறைக்குத் தேவையான விவரங்களை விரைவாகத் திரட்டி, சரிபார்த்து தொகுத்து வெளிப்பெறும் தகவல்களைப் பயன்படுத்திக் கொள்வதற்காக, புள்ளி விவரத்தொகுப்பு மற்றும் தகவல்கள் வெளிப்படுத்தும் முறையைப் படிப்படியாகப் பரவலாக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்திருந்தது. எனவே முதற்கட்டமாக கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரைக் கோட்டங்களில் கணிப்பொறிகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 7. வணிகர் நல வாரியம்:

வணிகர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்திற்காக வணிகர் நல வாரியத்தை அரசு அமைத்துள்ளது. முதலமைச்சர் அவர்கள் இவ்வாரியத்தின் தலைவராகவுள்ளார். இதன் இணைத் தலைவராக வணிகவரித்துறை அமைச்சரும் துணைத்தலைவராக திரு. எம். சதக்கத்துல்லா அவர்களும் உள்ளனர். இவ்வாரியத்தில் அலுவலர்களும், அலுவலர் அல்லாதோரும் உறுப்பினர்களாக உள்ளனர். 1993-94 ஆம் ஆண்டில் (28-2-1994 வரை) இவ்வாரியம் 105 புதிய உறுப்பினர்களைச் சேர்த்துள்ளது.

## 8. குறை தீர்க்கும் பிரிவு:

வணிகர்கள், தங்கள் குறைகளை எடுத்துரைப்பதற்குரிய ஓர் அமைப்பாகத் திகழ, 1984 ஆம் ஆண்டில் குறைதீர்க்கும் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவு இணை ஆணையரைத் (நிருவாகம்) தலைவராகவும், இணை ஆணையரையும் (மக்கள் தொடர்பு) உதவி ஆணையரையும் (வணிகவரி-2) உறுப்பினர்களாகவும் கொண்டுள்ளது.

## 9. விற்பனை வரி ஆலோசனைக் குழு:

விற்பனை வரி நிருவாகம் குறித்து வணிகர்களின் கருத்தை அறிய உதவும் வகையில், கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ள அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்குடன் அரசு மாநில அளவிலும்,



மாவட்டங்கள் அளவிலும் வணிக வரி ஆலோசனைக் குழுக்களை அமைத்துள்ளது. மாவட்ட ஆலோசனைக் குழுக்களுக்கு, அந்தந்த மாவட்ட ஆட்சியர்களே தலைவர்களாவர். இக்குழுக்களில் அலுவலர்கள் மற்றும் வாணிபக்கழகங்கள், வர்த்தகச் சங்கங்கள், கூட்டுறவுகள், வேளாண்மை நிறுவனங்கள் ஆகியவற்றின் அலுவலர் அல்லா பிரதிநிதிகள் உறுப்பினர்களாக உள்ளனர். வணிகவரிச் சட்டங்களினால் வர்த்தகத் துறையில் எழும் பல்வேறு வணிகப்பிரச்சினைகள், விற்பனை வரிச் சட்டங்கள், விதிகள் ஆகியவற்றை நிருவகிப்பது தொடர்பான பிரச்சினைகளை இக்குழு பரிசீலிக்கிறது. நிருவாகத்தை மேம்படுத்தவும் வணிகர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்கவும், இக்குழுக்களின் தீர்மானங்களும் அவை தெரிவிக்கின்ற ஆலோசனைகளும் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

## 10. மேல்வரி மற்றும் கேளிக்கை வரி வசூலிலிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியமளித்தல்:

உள்ளாட்சி மன்றங்களின் வருவாய் ஆதாரங்களைப் பெருக்கும் பொருட்டு, விற்பனை வரியின் மீது 20 சதவீதம் மேல்வரி விதிக்கப்பட்டு, அதன்மூலம் கிடைக்கும் தொகை அந்தந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியமாக வழங்கப்படுகிறது. அதுபோன்றே சென்னை மாநகராட்சிப் பகுதியில் வசூலிக்கப்படும் விற்பனை வரி மீதான மேல்வரியில் 50 சதவீதம் தொகை மாநகராட்சிக்கு மானியமாக வழங்கப்படுகிறது. அவ்வாறே கேளிக்கை வரி வசூலில் மாநகராட்சிகள் மற்றும் தேர்வு நிலை நகராட்சிகளுக்கு 70 சதவீதமும், மற்ற உள்ளாட்சி மன்றங்களுக்கு 60 சதவீதமும் ஒப்படைக்கப்படுகின்றன.

## 11. காலம் தள்ளி வரி செலுத்தும் சலுகை உட்பட தொழிலகங்களுக்கான விற்பனை வரிச் சலுகைகள்.

மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக மிகப் பின்தங்கிய மாவட்டங்களில் தொடங்கப்படும் புதிய தொழிலகங்கள் செலுத்த வேண்டிய வரி முழுமையாக ரத்து செய்யப்பட்டுள்ளது. அத்துடன் புதிய தொழில்கள், தொழிலக விரிவாக்கங்கள், நலிந்துபோன தொழிலகங்கள் மற்றும் துணி ஆலைகள் ஆகியவை செலுத்தவேண்டிய வரிகளை, காலம் தள்ளி வட்டியின்றி செலுத்தும் சலுகையினையும் அரசு வழங்கி வருகிறது. 1993-94 ஆம் ஆண்டில் 28-2-1994 வரை இவ்வகையில் ரூபாய் 85.76 கோடி வரியினைக் காலம் தள்ளிச் செலுத்தும் சலுகை, தொழிலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு காலந்தள்ளி வரி செலுத்தும் திட்டத்தின் முழுப்பயனையும் மாநிலத்தில் உள்ள தொழிலகங்கள் அடையும் விதத்தில், அவ்வரியைச் செலுத்திவிட்டதாகக் கருதி வருமான வரிச்சட்டத்தின்

பிரிவு 43(பி) யின் கீழ் வரி விலக்குப்பெற வகை செய்யும் நோக்கத்தில் 11-2-1994 நாளிட்ட வணிகவரிகள் மற்றும் அறநிலையத்துறை அரசாணை (நிலை) எண்.48-ல் காலந்தள்ளிச் செலுத்த வேண்டிய வரியைச் செலுத்திவிட்ட தொகையாகக்கருதவும், அதற்கிணையான தொகையை தொழிலகங்களுக்கு வழங்கப்பட்ட வட்டியில்லாக் கடனாகக் கருதவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

## 12. வருவாய் வசூலில் காணப்படும் போக்கு:

வணிகவரித்துறையின் பல்வேறு சட்டங்களின்கீழ் வசூலிக்கப்பட்ட தொகை குறித்த விவரம் வருமாறு:

### (அ) தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டம்:

1989-90 முதல் 1993-94 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட வருவாய் பற்றிய விவரம் வருமாறு:

| நிதி ஆண்டு | மொத்த வரவு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1989-90 | 1426.04 |
| 1990-91 | 1779.03 |
| 1991-92 | 2130.27 |
| 1992-93 | 2507.28 |
| 1993-94 | 2819.23 |

### (ஆ) 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச்சட்டம்:

1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச்சட்டத்தின் கீழ் 1989-90 முதல் 1993-94 வரையிலான கால அளவில் வசூலிக்கப்பட்ட வருவாய் பற்றிய விவரம் வருமாறு:

| நிதி ஆண்டு | மொத்த வரவு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1989-90 | 240.04 |
| 1990-91 | 276.07 |
| 1991-92 | 329.84 |
| 1992-93 | 363.12 |
| 1993-94 | 394.91 |



### (இ) தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரிச்சட்டம் மற்றும் தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச்சட்டம்.

1989-90 முதல் 1993-94 வரையிலான கால அளவில் மேற்சொன்ன சட்டங்களின் கீழ் வசூலிக்கப்பட்ட வருவாய் பற்றிய விவரம் வருமாறு:

| நிதி ஆண்டு | மொத்த வரவு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1989-90 | 68.64 |
| 1990-91 | 69.62 |
| 1991-92 | 68.56 |
| 1992-93 | 76.81 |
| 1993-94 | 82.19 |

### (ஈ) தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச்சட்டம்:

1989-90 முதல் 1993-94 வரையிலான கால அளவில் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட வருவாய் பற்றிய விவரம் வருமாறு:

| நிதி ஆண்டு | மொத்த வரவு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1989-90 | 5.70 |
| 1990-91 | 5.66 |
| 1991-92 | 4.67 |
| 1992-93 | 5.12 |
| 1993-94 | 5.68 |

### (உ) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள் தங்கும் விடுதிகள் ஆகியவற்றில் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீதான வரி விதிப்புச் சட்டம்:

1989-90 முதல் 1993-94 வரையிலான கால அளவில் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட வருவாய் பற்றிய விவரம் வருமாறு:

| நிதி ஆண்டு | மொத்த வரவு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1989-90 | 17.98 |
| 1990-91 | 17.04 |

| | |
|---|---|
| 1991-92 | 17.46 |
| 1992–93 | 22.43 |
| 1993–94 | 27.75 |

### (ஊ) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச்சட்டம்:

1989–90 முதல் 1993-94 வரையிலான கால அளவில் இச்சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட வருவாய் பற்றிய விவரம் வருமாறு:

| நிதி ஆண்டு | மொத்த வரவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1989-90 | 6.89 |
| 1990-91 | 7.00 |
| 1991-92 | 6.00 |
| 1992–93 | 6.00 |
| 1993-94 | 2.00 |

### (எ) தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவின் மீதான வரிச்சட்டம்.

இச்சட்டம் 1990 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20 ஆம் நாள் முதல் செயலுக்கு வந்தது. 1989–90 முதல் 1993-94 வரையிலான கால அளவில் இச்சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட வருவாய் விவரம் வருமாறு:

| நிதி ஆண்டு | மொத்த வரவு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1989-90 | 0.55 |
| 1990-91 | 19.67 |
| 1991–92 | 24.84 |
| 1992-93 | 42.07 |
| 1993-94 | 69.51 |

**வ . சத்தியமூர்த்தி,**
*வணிகவரித்துறை அமைச்சர்.*